அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை: 3/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு- 07.
1988 ஜனவரி 21 ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 11 ஐயும்
வகுப்பு 11 தரம் 1 ஐயும் இணைத்தல்
இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு 11 தரம் 11ஐயும்
வகுப்பு 11 தரம் 1 ஐயும் இணைத்தல்.

---

(அ) இலங்கை நிருவாக சேவை பற்றிய 28.05.87 ஆம் தேதிய 371ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை சம்பந்தமாக தயைகூர்ந்து

1. 1 ஆம் பந்தியின் (அ) -இன் முன் உள்ள முன்னுரையை நீக்கிவிட்டு அதனிடத்தில் பின்வரும் பகுதியைப் பதிலீடு செய்க.

" 11.03.87 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஒரு தினத்தில் இலங்கை நிருவாக சேவையில் 10 வருட திருப்தி கரமான சேவையைப் பூர்த்தி செய்திருப்பவரும் சேவையில் உறுதி செய்யப்பட்டவரும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்தவருமான இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 11 ஐச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் 11.03.87 ஆம் திகதி முதல் அல்லது இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாளிலிருந்து இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 1 க்குப் பதவி உயர்த்தப்படுவார் "

11. 4-ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துடன் இதனை இணைக்கவும்.

" 7. பதவியேற்றத்துக்கான தகைமை பெற்ற திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதியில் இழைத்த ஏதேனும் குற்றத்துக்காக ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கேனும் ஆளாகியுள்ளீர்களா ? "

111. 7உம் 8உம் என்பவை 8உம் 9உம் என வாசிக்கும்படி

(ஆ) இலங்கை கணக்காளர் சேவை/பற்றிய 29.10.87 ஆம் தேதிய 384 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை சம்பந்தமாக தலைகூர்ந்த

1. 1(இ) பந்தியை நீக்கிவிட்டு அதனிடத்தில் கீழ்க்காணும் பந்தியைப் பதிலீடு செய்க.

" இ. பதவியேற்றத்துக்கான தகைமை பெற்ற திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதியில் இழைத்த ஏதேனும் குற்றத்துக்காக ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கேனும் ஆளாகாதிருத்தல் ".

11, சுற்றறிக்கையின் 4-ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு இணைக்கப் பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் 7-ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதனிடத்தில் கீழ்க்காணும் பந்தியைப் பதிலீடு செய்க.

" பதவியேற்றத்துக்கான தகைமை பெற்ற திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதியில் இழைத்த ஏதேனும் குற்றத்துக்காக ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கேனும் ஆளாகியுள்ளீர்களா ? "

( டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன )
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ந/19.